# அதிபர் டிரம்ப்- பிரதமர் மோடி வர்த்தக பேச்சு

## எதிர்கால திசை என்னவாக இருக்கும்?

அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் கடந்த ஜனவரி 20ம் தேதி பதவியேற்ற பிறகு, முதல் ஒரு மாதத்துக்குள் அவர், வெள்ளை மாளி கைக்கு அழைத்துப் பேசிய 4 வெளிநாட்டு தலைவர்களில் பிரதமர் மோடியும் ஒருவர்.

வெளிநாடுகளில் குறிப்பாக, சீனாவில் 1980ல் நிறுவப்பட்ட அமெரிக்க நிறுவனங்களால் தயாரிக்கப்படும் பொருட்கள் அமெரிக்கா மற்றும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றன. அந்த நிறுவனங்கள், அமெரிக்காவுக்கு இடம்பெயர்ந்து உற்பத்தி செய்து உலக நாடுகளுக்கு விற்க வேண்டும் என்பதே அவர் நோக்கம். இதற்காக பெருநிறுவன (கார்ப்பரேட்) வரி விகிதத்தை 25 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக குறைத்துள்ளார்.

### வர்த்தக பற்றாக்குறை

கரோனா பெருந்தொற்றால் ஏற்பட்ட மந்தநிலைக்கு பிறகு அமெரிக்காவின் மொத்த வர்த்தக பற்றாக்குறை 2022ல் 70.8 பில்லியன் டாலராக இருந்தது. இது 2024ல் 98.4 பில்லியன் டாலராக அதிகரித்தது.

அமெரிக்கா இந்தியா இடையிலான வர்த்தகத்தில் இந்தியாவின் நிகர வருவாய் 201920 (கரோனா முன்பு) நிதியாண்டில் 17.3 பில்லியன் டாலராக இருந்தது. கரோனாவுக்குப் பிந்தைய 202122ல் 32.8 பில்லியன் டாலராக உயர்ந்தது. 202324 நிதியாண்டில் இந்தியா 123.1 பில்லியன் டாலர் அளவுக்கு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. ஆனால், அமெரிக்கா 87.4 பில்லியன் டாலர் மதிப்பில் இந்தியாவிடமிருந்து இறக்குமதி செய்துள்ளது. இந்தியாவுடனான, அமெரிக்காவின் வர்த்தக பற்றாக்குறை, (இந்தியாவின் நிகர வருவாய்) 45.7 பில்லியன் டாலராக அதிகரித்தது.

### வர்த்தக வரிப்போர்

ஆண்டுதோறும் அதிகரித்து வரும் அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதே ட்ரம்பின் முதன்மையான நோக்கம். இந்த செய்தியை தெரிவிக்கும் வகையில், மோடி வருகை தரும் நாளான பிப்ரவரி 13 அன்று டிரம்ப் அலுவலகம் ஒரு புள்ளிவிவரத்தை வெளியிட்டது.

**அதில் டிரம்ப் முன்வைத்த வாதம்:**

அமெரிக்கா ஒரு திறந்த பொருளாதாரம் ஆனால் வர்த்தக பங்காளிகள் தங்கள் சந்தைகளை அமெரிக்கா வின்



டிரம்ப் - மோடி

ஏற்றுமதிகளுக்கு மூடி வைத்திருக்கிறார்கள். எத்தனால் மீதான அமெரிக்காவின் வரி 2.5 சதவீதம். ஆனால் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எத்தனால் மீதான பிரேசிலின் வரி 18 சதவீதம்.

2024ல், அமெரிக்கா பிரேசிலிலிருந்து 200 மில்லியன் டாலர் எத்தனாலை இறக்குமதி செய்தது, ஆனால்அமெரிக்கா பிரேசிலுக்கு 52 மில்லியன் டாலர் எத்தனாலை மட்டுமே ஏற்றுமதி செய்தது. விவசாயப் பொருட்கள் மீதான அமெரிக்காவின் சராசரி வரி 5 சதவீதம். இந்தியாவின் சராசரி 17 சதவீதம்.

ஐரோப்பிய யூனியன், இறக்குமதி கார்களுக்கு 10 சதவீத வரி விதிக்கிறது. அமெரிக்கா 2.5 சதவீத வரியை மட்டுமே விதிக்கிறது. 132 நாடுகளில் மற்றும் 6 லட்சத்துக்கும் அதிகமான தயாரிப்பு வரிசைகளில், அமெரிக்க ஏற்றுமதியாளர்கள் மூன்றில் இரண்டு பங்கு நேரத்திற்கும் மேலாக அதிக வரிகளை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறு அந்த அறிக்கையானது, தங்களது வர்த்தக கூட்டாளிகள் எப்படியெல்லாம் தங்கள் நாட்டில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு அதிக வரிவிதிக்கின்றனர் என்பதை டிரம்ப் சுட்டிக் காட்டினார்.

### இருநாட்டு வர்த்தக உறவு

இந்தியாவின் நம்பர் 1 வர்த்தக கூட்டாளி அமெரிக்காவானாலும் அமெரிக்க வர்த்தக கூட்டாளிகளின் பட்டியலில் இந்தியா 10 வது இடத்தில் உள்ளது. இந்தோபசிபிக் பிராந்தியத்தில் இரு நாடுகளும் தங்களது பொருளாதார செல்வாக்கை மேம்படுத்தினால் சீனாவின் இன்றைய பொருளாதார முதன்மையை மேலும் மழுங்கடிக்கலாம் என அமெரிக்க வெளியுறவுக் கொள்கை நிபுணர்கள் கருதுகின்றனர்.

உலகின் 'நம்பர் ஒன்' இடத்தை அடைவதற்கான போட்டியில் சீனாவை அமெரிக்கா கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு இந்தியா தேவை. காலையில் இந்தியப் பிரதமரை வரவேற்று உரையாற்றிய அதிபர் டிரம்ப், இந்தியாவுடனான வர்த்தகப் பற்றாக்குறையை அமெரிக்க இறக்குமதிகள் மீது இந்தியா விதிக்கும் வரிகளுக்கு இணையாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரி விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பிற்பகலில் நடந்த வர்த்தக பேச்சு வார்த்தையில், 'அமெரிக்கா நம்முடைய பொருட்களின் இறக்குமதியை அதிகரிப்பதன் மூலமும், வரிக் குறைப்பை ஏற்றுக்கொள்வதாக' மோடி தனது திறன்களை வெளிப்படுத்தியிருந்தார்.

அதனால், பத்திரிக்கையாளர் சந்திப்பின் போது, பிரதமரை திறமையாக பேரம் பேசுபவர் என்று டிரம்ப் பாராட்டினார்.


இந்தியாவின் ஏற்றுமதி அமெரிக்காவின் ஏற்றுமதியில் இருந்து வேறுபட்டது மற்றும் இந்தியாவின் இறக்குமதியும் அமெரிக்காவின் இறக்குமதியிலிருந்து வேறுபட்டது.

கூட்டு அறிக்கையில், 'இருதரப்பு வர்த்தகத்தை 2030க்குள் 500 பில்லியன் டாலர்களாக உயர்த்த 'மிஷன்500' அறிவிக்கப்பட்டது. அதிநவீன எப்35 ரக போர் விமானங்கள், கச்சா எண்ணை, எரிவாயு உள்ளிட்டவை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இதன் மூலம் வர்த்தக பற்றாக்குறை சரிசெய்யப்படும்.

தகவல் தொழில்நுட்ப பொருட்கள் மற்றும் உலோகங்கள் போன்ற அமெரிக்க தயாரிப்புகள் மீதான வரிகளை குறைக்க இந்தியா முன்வந்ததை அமெரிக்காவும், இந்திய மாம்பழங்கள் மற்றும் மாதுளை ஏற்றுமதியை அதிகரிக்க எடுக்கப்பட்ட அமெரிக்க நடவடிக்கைகளுக்கு இந்தியாவும் பரஸ்பரம் பாராட்டு தெரிவித்தன.

இந்த ஆண்டு செப்டம்பரில் மேலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு

இந்தியாவும், அமெரிக்காவின் போர்பன் விஸ்கி மீதான வரியை 150 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாகவும், ஹார்லி டேவிட்சன் மோட்டார் சைக்கிள்கள் மீதான வரியை குறைக்கும் இருதரப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



கட்டுரையாளர் :
டி.கே. ஜயராமன்